**தலவாக்கலை லிந்துல நகர சபை - 2023**

---------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலவாக்கலை லிந்துல நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை சட்டத்தின் (255 அதிகாரம்) 181 (I) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தலவாக்கலை லிந்துல நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை

அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 வேறு சட்டரீதியான தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைகள் தொடர்பான விசேட விதிமுறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுகள் முன்னைய ஆண்டுடன் ஏற்புடையதாகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iv) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் தொகுக்கப்பட்ட அறிக்கையின் 1.2.1 பிரிவு மற்றும் 1.2.2 பிரிவின் (அ) - (I)/(II),(ஈ), (இ) மற்றும் (எ) அவதானிப்புக்கள் தவிர்ந்த முன்னைய ஆண்டில் என்னால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுகள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் நன்கொடைகளாகப் பெறப்பட்ட ரூபா. 599,615 பெறுமதியான நூலகப் புத்தகங்கள் மற்றும் ரூபா. 2,880,397 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள் மூலதனப் மாக்கப்பட்டிருக்கவில்லை. | ஏதிர்காலத்தில் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பதாக் | சொத்துக்கள் மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டின் பெற வேண்டிய முத்திரைக் கட்டணமாக மிகை மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா. 414,080 திரண்ட நிதியிலிருந்து நீக்கப்பட வேண்யிருந்த போதும், நாட்குறிப்பு இல. 23 இன் ரூபா. 63,500 மாத்திரம் நீக்கப்பட்டிருந்தது. | ஏதிர்காலத்தில் சரிசெய்வேன் என் | கணக்குகள் சீர் செய்யப்படல் வேண்டும் |
| (இ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 திகதியன்று பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா. 912,440 இனால் குறைத்து கணக்கிடப்பட்டிருந்ததுடன், நீதிமன்றத் தண்டப்பணம் 03 வருடங்களினுள் ரூபா. 3,046,422 மிகை மதிப்பீடு செய்யப்பட்டமை திரண்ட நிதியுடன் சீர் செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று அபிவிருத்தித் திட்டமொன்றின் ரூபா. 396,950 பெறுமதியான கடன்பட்டோர் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது. | ஏதிர்வரும் ஆண்டில் இதனை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் என | - - மேற்படி - - |
| (உ) | மீளாய்வாண்டில் ரூபா. 1,282,358 பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்ட இயந்திர உபகரணங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - - | - - மேற்படி - - |
| (ஊ) | பொருட பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த 14 பொருட்களின் பெறுமதி ரூபா. 240,700 கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன், 10 பொருள் கூறுகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - - | - - மேற்படி - - |
| (எ) | பொதுக் களஞ்சியத்தின் கீழ் காட்டப்பட வேண்டிய ரூபா. 2,509,653 பெறுமதியான 40 இருப்புக் கூறுகள் தளபாடங்கள் மற்றும் பொருத்துகளின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தது. ரூபா. 11,157,848 இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்களின் பெறுமதியினுள் ரூபா. 1,000,653 பெறுமதியான நுகர்வுப் பண்டங்கள் உள்ளடங்கியிருந்தன. | - மேற்படி - - | - - மேற்படி - - |

### 1.6.2 இணங்காத கண்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | புரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வடிண்டின் இறுதித் திகதியில் நிதிக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்டிருந்த 02 கணக்குகளின் மீதிகள் அவற்றுடன் தொடர்பான அட்டவணைகளில் குறிப்படப்பட்ட மீதிகளுடன் ஒப்பிடுகையில் ரூபா. 3,597,101 வித்தியாசம் காணப்பட்டது. | 2024 ஆண்டில் சீர் செய்யப்பட்டுள்ளதென | வித்தியாசங்களை இனங்கண்டு சீர் செய்தல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் காணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வடிண்டின் இறுதித் தினத்தில் நிதிக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா. 6,965,508 பெறுமதியான 12 கணக்கு மீதிகளுடன் தொடர்பான ஆவணங்கள், கோவைகள் மற்றும் பேரேடுகள் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக அவைகளை கணக்காய்வின் போது திருப்திகரமான முறையில் மெய்மையாய்வு செய்ய முடியவில்லை. | 2024 ஆண்டில் சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமென | மீதிகளை உறுதி செய்வதற்குத் தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள்** | | | |
| i. | நிதிப் பிரமாணம் 189 மற்றும் 486 | மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்ட வங்கி இணக்கக்கூற்றில் 2021 மே 10 திகதி முதல் காணப்பட்டு வருகின்ற ரூபா. 100.000 பெறுமதியான மறுக்கப்பட்ட காசோலைகள் காணப்பட்டன. | இதற்காக ஒரு வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதென | வழக்கு தீர்ப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| ii. | நிதிப் பிரமாணம் 571(3) | காலாவதியான, 11 சந்தர்ப்பங்களுடன் தொடர்பான ரூபா 315,530 பெறுமதியான வைப்புகள் சீர் செய்யப்பட்டிருக்க வில்லை. | இம் முற்பணக் கொடுப்பனவுகளை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.8 போதியளவு அதிகாரத்தால் ஆதாரப்படுத்தாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டின் திசெம்பர் 13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட கட்டிட விண்ணப்பத்துக்கு திட்டக்குழு அங்கீகாரம் அளிக்காத நிலையில், நகர சபை தலைவரால் மீளாய்வாண்டு ஜனவரி 25 ஆம் திகதி கட்டிடம் நிர்மாணத்திற்கான அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தை அனுமதித்து அங்கீகாரம் அளித்து அனுமதி வழங்கினார். | உரிய கோவை திட்டக் குழுவிற்கு அனுப்பி திட்டக் குழுவுக்கு அனுப்பப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு மட்டுமே அந்த அபிவிருத்தி அனுமதிக்க நடவடிக்கை எடுத்ததாக | காணப்படும் சட்டங்கள்,விதிகள் எல்லைக்குள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 863,691 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,345,147 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் மூலம் | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீதவரியும் வரியும் | 6,460,000 | 6,177,380 | 5,267,314 | 4,792,030 | 6,780,000 | 6,724,918 | 6,148,583 | 3,881,965 |
| (ii) | வாடகை | 7,733,500 | 11,042,794 | 10,869,206 | 6,207,618 | 10,045,040 | 11,805,249 | 11,338,817 | 6,034,029 |
| (iii) | அனுமதிப்பத் திரக் கட்டணங்கள் | 1,676,000 | - | 1,077,000 | - | 895,000 | 594,000 | 594,000 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 5,962,600 | 5,055,918 | 3,970,008 | 6,579,142 | 59,801,720 | 7,500,000 | 8,597,808 | 5,493,232 |
| | மொத்தம் | 21,832,100 | 22,276,092 | 21,183,528 | 17,578,790 | 77,521,760 | 26,624,167 | 26,679,208 | 15,409,226 |

### 2.3.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் கீழ்வருமாறு

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருமான முகாமைத்துவம்<br>------------------------------------------- | | |
| | மீளாய்வாண்டின் திசம்பர் 31 திகதியன்று சபைக்கு கிடைக்கப் பெற வேண்டிய முன்னைய ஆண்டுகளின் நிலுவைகள் ரூபா. 4,608,817 மற்றும், வாராந்த சந்தை மற்றும் வாடிவீடு வாடகை ரூபா. 1,289,000 என்பவற்றில் எந்தவொரு தொகையும் அறவிடப்படாதிருந்ததுடன் வீதவரி மற்றும் வரி, வீட்டு வாடகை மற்றும் நிலவரி நிலுவை வருமான சேகரிப்பு 01 முதல் 23 வீதம் வரையான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | 2024 ஆம் ஆண்டு நடமாடும் சேவையின் மூலம் வருமானம் சேகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதென | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வருமானம் சேகரிப்பிற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் |
| (ஆ) | **வீதவரி மற்றும் வரி** | | |
| **i.** | 1946 ஆகஸ்ட் 07 இன் 30ஆம் இலக்க வீதவரி மற்றும் மதிப்பீட்டு சட்டத்தின் 20ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் உள்ள அனைத்து அசையா சொத்துக்களும் 05 வருடங்களுக்கு ஒரு முறையேனும் மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதும், அவ்வாறின்றி 2011 ஆம் ஆண்டின் மதிப்பீட்டிற்கமைவாக வீதவரி மற்றும் வரி அறவிடப்பட்டிருந்தது. | தற்பொழுது சொத்து மதிப்பீடு நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான அறிக்கை இதுவரை கிடைக்கப்பெறவில்லை என | வீதவரி மதிப்பீடு குறித்த காலத்தினுள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| ii. | நகர சபைச் சட்டத்தின் (அதிகாரம் 255) பிரிவு 170 இன் பிரகாரம் செயற்பட்டு 05 முதல் 18 வருடங்கள் வரை நிலுவையாகக் காணப்பட்ட ரூபா. 2,993,419 பெறுமதியான வீதவரியினை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2024 ஜுன் மாதமளவில் சொத்துக்களை தடை செய்யும் நடவடிக்கைக்கான ஏற்பாடு மேற்கொள்ளப் பட்டுள்ளது. | நிலுவை வருமானம் அறவீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | **அனுமதிப் பத்திரக் கட்டணம்** | | |
| | நகர சபை அதிகாரப் பிரதேசத்தினுள் காணப்படும் வியாபார நிலையங்களுக்கான அனுமதிப் பத்திரக் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்த போதும், மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த 134 வியாபார நிலையங்கள் அனுமதிப் பத்திரம் பெற்றிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வியாபார நிலைய அனுமதிப் பத்திர வருமானம் சிட்டையிடப்பட்டு அறவிடப்படல் வேண்டும். |

(ஈ) **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டின் திசம்பர் 31 திகதியன்று பெற வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா. 3,913,182 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா. 2,665,960 ஆகவிருந்தது. | இது தொடர்பாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளதென | வருமானத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் |

(உ) <u>**வேறு வருமானங்கள்**</u>

| | | | |
|---|---|---|---|
| i. | 1952 இன் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற நிறைவேற்றப்பட்ட உப சட்ட விதிக் கோவையின் விளம்பரப் பதாதைகள் நிறைவேற்றப்பட்ட உப சட்டக் கோவையின் அடிப்படையில் சபையின் அனுமதிப்பத்திரம் பெறப்படாது ரூபா. 205,800 பெறுமதியான 25 விளம்பரப் பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அவற்றுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இவ் வருடம் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பேன் என | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கையோ கட்டுப்பாட்டு அறிக்கையோ தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டில் தயாரிப்பதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதென | செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படல் வேண்டும். |

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் பாரவூர்தி ஒன்றினை பழுது பார்ப்பதற்காக ரூபா. 569,890 செலவிடப்பட்டிருந்த போதும், குறித்த பாரவூர்தி பாவனைக்கு உகந்த நிலையில் இல்லாததன் காரணமாக அதற்காக செலவிடப்பட்ட தொகை பெறுமதியற்றதாகக் காணப்பட்டது. | இவ் வாகனத்தில் ஸ்டார்ட்டர் மோட்டர் காணப்படாததன் காரணமாக இது ஓட்ட நிலையில் இல்லையென | தேவைகளைக் கருத்தில் கொண்டு திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தலவாக்கலை பீரிஸ் மலர் சாலைக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டு வரும் மூன்று மாடிக் கட்டடம் தொடர்பாக சபை சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டவிரோத நிர்மாணங்கள் தொடர்பாக கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதென | சட்டவிரோத நிர்மாணங்கள் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | சபையின் பொது நூலகத்திற்கு அன்பளிப்பாக கிடைக்கப் பெற்றிருந்த மடிக்கணினி, அச்சுப்பொறி, வருடி உள்ளிட்ட 20 பொருட்களின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கிலிடப்படாதிருந்ததுடன், கணக்காய்வுத் தினத்தன்று அவை பயன்படுத்தபடாத நிலையில் காணப்பட்டன. | 2024 ஆம் ஆண்டு சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமென | சொத்துக்கள் மூலதனப்படுத்தப்படல் வேண்டும். |

## 3.4 பயன்பாடற்ற அல்லது குறை பயன்பாடுடைய சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தனியார் செயற்திட்டம் ஒன்றின் ஊடாக பொது நூலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த 08 உபகரணங்கள் மீளாய்வாண்டின் செப்டம்பர் 18 ஆம் திகதி முதல் பயன்படுத்தப்படாத நிலையில் காணப்பட்டன. | இப் பொருட்களை குறித்த பொருட்பதிவுப் புத்தகங்களில் உள்ளீடு செய்து பயன்படுத்து வதற்கான நடவடிக்கை எடுப்பேன் என | பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று காணப்பட்ட 03 முதல் 08 வருடங்களாக காணப்பட்டு வருகின்ற ரூபா. 15,230,000 பெறுமதியான 06 வாகனங்கள் மற்றும் ரூபா. 641,000 பெறுமதியான 03 சொத்துகள் பயன்பாடற்ற அல்லது குறை பயன்பாட்டு நிலையில் காணப்பட்டன. | எதிர்காலத்தில் ஏலத்தில் விற்பனை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என | பாவனைக்கு உட்படுத்தக்கூடிய தன்மை தொடர்பில் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பயன்பாட்டிலுள்ள 04 வாகனங்களின் மைலோ மானிகளை திருத்தம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக 2020 முதல் மீளாய்வாண்டின் திசம்பர் 31 வரையிலான காலப்பகுதியினுள் எரிபொருளுக்காக செலவிடப்பட்ட ரூபா. 5,727,143 தொகையினை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது. | மைலோ மானிகளை திருத்தம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என | மைலோ மானிகள் திருத்தம் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | வாகனமொன்று நடமாடும் நூலகமாகப் பயன்படுத்தப்படும் நோக்கில் திருத்தியமைக்கப் பட்டிருந்த போதும், அத் தேவைக்காகப் பயன்படுத்தப் படாது சபை வளாகத்தில் பயன்பாடின்றி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | திருத்தம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என | ஏதிர்பார்க்கப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்படல் வேண்டும். |

## 3.6 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 திகதியன்று அனுமதிக்கப்பட்ட மற்றும் நடைமுறையிலுள்ள பணிக்குழுவினரை ஒப்பிட்டுப் பார்க்கையில், 12 பதவிகளுக்கான 30 வெற்றிடங்கள் காணப்பட்டன. | இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதென | வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 திகதியன்று ஓய்வு பெற்ற, மரணமடைந்த மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற 05 ஊழியர்களிடமிருந்து கடன் நிலுவைகள் மொத்தமாக ரூபா. 639,986 அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடன் நிலுவைகள் எதிர்காலத்தில் அறவிடப்படும் என | கடன் நிலுவைகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |